# மாற்றுக் கட்சி இளைஞர்கள் 3,000 பேர் தி.மு.கழகத்தில் இணைப்பு!

# தயக்கத்தோடு இருக்கும் உங்களின் நண்பர்கள் குடும்பத்தினரையும் அழைத்து வாருங்கள்!

## சென்னை – அண்ணா அறிவாலயம் ‘கலைஞர் அரங்கத்தில்’ நடைபெற்ற நிகழ்ச்சியில்,

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அழைப்பு!

சென்னை, ஜன. 26 -

**சென்னை, அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கத்தில், தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் தலைமையை ஏற்று, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டலுடன் பல்வேறு மாவட்டங்களில் இருந்து மாற்றுக் கட்சி இளைஞர்கள் 3,000 பேர் தி.மு.கழகத்தில் இணையும் விழா நேற்று முன்தினம் நடைபெற்றது.**

**நிகழ்ச்சியில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய எழுச்சிமிக்க உரைவருமாறு:**

இன்று மாற்றுக் கட்சியிலிருந்து விலகி, நீங்கள் அனைவரும் முத்தமிழறிஞர் கலைஞரின் உடன்பிறப்புகளாக, நம் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைகிறீர்கள். இந்த நிகழ்ச்சியை ஒருங்கிணைத்த நம் மாணவர் அணித் தலைவர் சகோதரர் ராஜீவ் காந்தி அவர்களுக்கு என் முதற்கண் பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல், இந்த நிகழ்ச்சியை ஒருங்கிணைத்த, நம் இளைஞர் அணி மாநிலத் துணைச் செயலாளர் சகோதரர் ஜோயல் உள்ளிட்டோருக்கும் எனது பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

### தெரிந்திருக்கக்கூடிய ஒன்றுதான்!

இன்னும் 14 மாதங்களில் சட்டப்பேரவைத் தேர்தல் வரப்போகிறது. பொதுவாக தேர்தல் வருகின்ற நேரத்தில் ஆளுங்கட்சியை எதிர்த்து, எதிரணிகளில்தான் அனைவரும் சென்று சேர்வார்கள். அதுதான் வழக்கம். ஆனால், இன்றைக்கு வித்தியாசமாக ஆளுங்கட்சியில், எதிர்க்கட்சியில் இருக்கின்ற நீங்கள், உங்கள் அனைவரையும் இணைத்துக்கொண்டு இருக்கிறீர்கள். எனவே வருகின்ற சட்டப்பேரவைத் தேர்தலின் முடிவு என்ன என்பது உங்களுக்கு தெரிந்திருக்கக்கூடிய ஒன்றுதான்.

வெறும் சட்டப்பேரவைத் தேர்தல் முடிவை மட்டும் நோக்கி, நீங்கள் தி.மு.கழகத்தில் இணையவில்லை. நம் இயக்கத்தின் கொள்கைகளை ஏற்று, இலட்சியங்களை ஏற்றுக்கொண்டு, நம் கழகத் தலைவரின் தலைமையை ஏற்று நீங்கள் எல்லாம் இணைந்திருக்கிறீர்கள். இதுபோன்ற சமயத்தில் நீங்கள் கழகத்தில் இணைவதைக் கண்டு அவர்களுக்கு வயிற்றெரிச்சல் வரத்தான் செய்யும். அதற்காகவே, மீண்டும் உங்கள் அனைவருக்கும் எனது பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

### அடையாள அழிப்பு முயற்சி!

தமிழ்நாட்டில் என்ன நடந்துகொண்டு இருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். ஒன்றிய அரசு சார்பாக, ஒருவரை அனுப்பி வைத்து இருக்கிறார்கள். அவர்தான் நம் ஆளுநர் அவர்கள். அவர் என்ன மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவரா? நியமிக்கப்பட்ட ஒருவர். அவர் என்ன செய்து கொண்டிருக்கிறார். நம் தமிழ்நாட்டின் அடையாளங்களை, ஒவ்வொன்றாக அழிக்கின்ற முயற்சியிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார். திருவள்ளுவருக்கு காவிச் சாயம் பூசுவது, தமிழ்த்தாய் வாழ்த்தைக் கொச்சைப்படுத்துவது, தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடக்கூடாது என்று சட்டசபையிலேயே சொல்வது, சட்டசபையைப் புறக்கணித்து விட்டு செல்வது. இதுதான் அவரின் வேலை.




இதையெல்லாம் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவரும் தட்டிக்கேட்க வேண்டும். ஆனால், அவர் என்ன செய்துகொண்டு இருக்கிறார்? ``சட்டமன்றத்தில் நாங்கள் பேசுவதை தொலைக்காட்சியில் காட்டுங்கள். எங்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் பேசுவதை தொலைக்காட்சியில் காட்டுங்கள்'' என்று வேண்டுகோள் வைக்கலாம். ஆனால், நம் எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் கொஞ்சம் வித்தியாசமானவர். ``ஆளுநரை, தயவு செய்து தொலைக்காட்சியில் காட்டுங்கள், ஆளுநர் வந்து போவதையாவது காட்டுங்கள்'' என்று ஒரு கோரிக்கை வைக்கிறார்.

### வெற்றிபெற்ற ஒரே இயக்கம்!

நம் தலைவர் அவர்கள் கழகத் தலைவராகப் பொறுப்பேற்று 10 தேர்தல்களை எதிர்கொண்டுள்ளோம். அதன்பிறகு, நடைபெற்ற 10 தேர்தல்களிலும் வெற்றிபெற்ற ஒரே இயக்கம் நம் திராவிட முன்னேற்றக் கழகம்தான். வருகின்ற ஈரோடு சட்டமன்ற இடைத்தேர்தலிலும் நிச்சயமாக மிகப்பெரிய வெற்றியை நாம் அடைய இருக்கிறோம். அதற்கு நீங்கள் ஒவ்வொருவரும் களத்தில் இறங்கி, பிரச்சாரம் செய்ய வேண்டும். ஈரோடு கிழக்கு இடைத் தேர்தலில் உங்களின் பிரச்சாரம் மிக மிக முக்கியம் என்பதை இந்த நேரத்தில் நினைவுப் படுத்த விரும்புகிறேன்.

### மக்களைச் சந்தியுங்கள்!

நம் அரசு எப்படி மக்களுக்கான அரசு என்பதற்கு, ஒரு சின்ன எடுத்துக்காட்டை மட்டும் உங்களுக்குக் கூற விரும்புகிறேன். சமீபத்தில், நடைபெற்ற மதுரை `அரிட்டாப்பட்டி டங்ஸ்டன் விவகாரம்' அதற்கு சிறந்த உதாரணம். ஒன்றிய அரசு அந்தத் திட்டத்தை தமிழ்நாட்டிற்குள் கொண்டு வந்தது.

அப்போதே, நம் மாநில அரசு அதை எதிர்த்தது. இருந்தாலும், அங்கு இருக்கின்ற மக்கள் போராட்டத்தில் இறங்கினார்கள். உடனே, நம் முதலமைச்சர் அவர்கள் அங்கு இருக்கின்ற அமைச்சர்களை அழைத்து, சட்டமன்ற உறுப்பினர்களை அழைத்து, ``உடனே சென்று மக்களைச் சந்தியுங்கள்'' என்று சொன்னார். அதுமட்டுமல்ல, சட்டமன்றத்தில் ஒரு உறுதிமொழி கொடுத்தார்.

எந்த நேரத்திலும், எக்காலத்திலும் தி.மு.க. ஆட்சியில் இருக்கும்வரை நிச்சயம் மதுரையில் அந்த டங்ஸ்டன் திட்டம் நிறைவேற்றப்பட மாட்டாது என்று கூறினார். அதை இப்போது செய்தும் காட்டிவிட்டார். மக்களோடு மக்களாக நம் முதலமைச்சர் உள்ளார். இது மட்டுமல்ல, மக்களுக்கான பல திட்டங்களை நம் முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றிக் கொண்டு இருக்கிறார். அவருக்கு உறுதுணையாக இன்றைக்கு நீங்கள் அனைவரும் நம் கழகத்தில் இணைந்து இருக்கிறீர்கள். இனிமேல், எங்களுக்கு பெரியாரைப்பற்றி எல்லாம் கவலையே இல்லை. பெரியாரைப் பற்றி தூற்றுவோர்களை எல்லாம், நீங்கள் பார்த்துக் கொள்வீர்கள். அதற்கு இனிமேல் நீங்கள் எல்லாம் பொறுப்பேற்றுக் கொள்வீர்கள்.

### 200 தொகுதிகளில் வெல்ல வேண்டும்!

வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் 200 தொகுதிகளில் வெல்ல வேண்டும் என்பது நம்முடைய தலைவர் நிர்ணயித்த இலக்கு. `வெல்வோம் இருநூறு, படைப்போம் வரலாறு' என்று கூறியுள்ளார். உங்களின் எழுச்சியைப் பார்க்கும்போது, இருநூறு இல்லை, அதற்கும் மேற்பட்ட தொகுதிகளில் திராவிட முன்னேற்றக் கழகம் நிச்சயமாக வெற்றி பெறும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகம் இன்றைக்கு பவள விழாவைக் கொண்டாடிக்கொண்டு இருக்கிறது என்றால், நம் கொள்கை, கோட்பாடு அத்தகைய வலிமைமிக்கது. நீங்கள் நம் கழகத்தின் கொள்கையை ஏற்று, தலைவரின் தலைமையை ஏற்று, இன்றைக்கு நம் இயக்கத்தில் சேர்ந்து இருக்கிறீர்கள். இந்த நேரத்திலே, உங்களிடம் ஒரு சிறிய வேண்டுகோளை வைக்கிறேன்.

நீங்கள் வந்து விட்டீர்கள்... ஆனால், உங்களைப்போல இன்னும் ஆயிரக்கணக்கானோர் வருவதற்கு தயக்கத்தோடு, அந்தப் பக்கத்தில் உங்களுக்குத் தெரிந்தவர்கள் இருப்பார்கள். உங்களின் நண்பர்களே இருப்பார்கள். உங்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் இருப்பார்கள். அவர்களிடத்தில் நீங்கள் எடுத்துச் சொல்லி, அவர்கள் அத்தனைப்பேரையும் நம் கழகத்தில் இணைக்கின்ற முயற்சியில் நீங்கள் ஈடுபட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, வந்திருந்த உங்கள் அத்தனைப் பேரையும் வருக, வருக என வரவேற்று உங்கள் உழைப்பிற்கான அங்கீகாரத்தை நிச்சயம் நம் தலைவர் தகுந்த நேரத்தில் தருவார் என்று கூறிக்கொண்டு, மீண்டும் இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி, உங்களையெல்லாம் வருக, வருக என வரவேற்று மகிழ்கிறேன்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

